**செய்தி வெளியீடு எண்:219** **நாள்: 20.04.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

மத்திய அரசு மோட்டார் வாகன சட்டத்தில் வண்ண சுழல் விளக்குகளை முக்கிய பிரமுகர்களின் வாகனங்களில் பொருத்துவது தொடர்பாக புதிதாக 1.5.2017 முதல் கொண்டு வரவுள்ள திருத்தங்கள் அடிப்படையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தனது வாகனத்திலிருந்த வண்ண சுழல் விளக்கை நேற்றைய தினம் அகற்றியதை தொடர்ந்து, தமிழகத்திலுள்ள அரசு வாகனங்களில் உள்ள வண்ண சுழல் விளக்குகளை அகற்றுவதற்கு முன்னோடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள், தனது முதலமைச்சர் அரசு வாகனத்தில் பொருத்தப்பட்டிருந்த சிவப்பு வண்ண சுழல் விளக்கினை இன்று (20.4.2017) தலைமைச் செயலகத்தில் அகற்றிவிட்டார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் செய்தியாளர்கள் உடனிருந்தனர்.

இதைப் பின்பற்றி தமிழ்நாட்டிலுள்ள அனைத்து முக்கிய பிரமுகர்களின் வாகனங்களில் பொருத்தப்பட்டுள்ள வண்ண சுழல் விளக்குகள் உடனடியாக அகற்றப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தெரிவித்தார்கள்.

அதன் பின்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் விவரம்:-

“மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் மக்களோடு மக்களாக பயணம் செய்யவேண்டும் என்ற அடிப்படையில், பிரதமர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், முதலமைச்சர்கள் மற்ற துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் அனைவரும் தங்கள் கார்களிலே வைக்கப்பட்டுள்ள சிவப்பு சுழல் விளக்குகளை அகற்ற வேண்டும் என்ற

ஒரு உத்தரவை பிறப்பித்திருக்கின்றார்கள். அதன் அடிப்படையில் தமிழகத்தில் முதலமைச்சருடைய, என்னுடைய காரில் பொருத்தப்பட்டுள்ள சிவப்பு சுழல் விளக்கை இப்பொழுது நான் அகற்றியிருக்கிறேன். என்னோடு, அமைச்சர் பெருமக்களும் தங்களுடைய கார்களில் இருக்கக்கூடிய சிவப்பு சுழல் விளக்குகளை அகற்றிக் கொள்வார்கள். அதைத் தொடர்ந்து, தமிழகத்திலுள்ள உயர் அதிகாரிகளுடைய கார்களிலே பொருத்தப்பட்டுள்ள வண்ண சுழல் விளக்குகளும் அகற்றப்படும்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலேயே அவர் பயணம் செய்த அந்தக் கார்களில் சிவப்பு சுழல் விளக்குகளை பொருத்தாமல் அனைவருக்கும் முன் உதாரணமாகத் திகழ்ந்தார். இப்பொழுது மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கார்களிலே சிவப்பு சுழல் விளக்குகள் அகற்றப்படும் என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து, முதலமைச்சர் என்ற முறையிலே நானும், நான் பயணம் செய்கின்ற காரிலே பொருத்தப்பட்டுள்ள சிவப்பு சுழல் விளக்கை இன்றிலிருந்து அகற்றுகிறேன் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய அரசைப் பொறுத்தவரைக்கும் அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. குடிநீர் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்து தமிழகத்தில் நிலவுகின்ற குடிநீர் பிரச்சினை இன்றைக்கு முழுமையாக தீர்ப்பதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்து, உள்ளாட்சி அமைப்பின் மூலமாக 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. கூடுதலாக 100 கோடி ரூபாய் இப்பொழுது குடிநீருக்கு ஒதுக்கப்பட்டு, பணிகளும் துவக்கப்பட்டிருக்கின்றன. அதே போல், தமிழகத்தில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள் தூர்வாரப்படுவதற்காக குடிமராமத்து பணிகள் துவங்கப்பட்டு அந்தப் பணியும் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், 300 கோடி ரூபாய் குடிமராமத்து பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகளும் துவக்க இருக்கின்றன என்பதையும் இந்த

நேரத்திலே சுட்டிக்காட்டி, இன்றைக்கு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவினுடைய ஆட்சியிலே போடப்பட்ட திட்டங்கள் முழுமையாக இன்றைக்கு நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.'' எனக் கூறினார்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை –9.**

**நாள்: 20.4.2017**